## அரச நிதி[*]

வரவு செலவுத்திட்டக் கொள்கையின் முதன்மையான எதிர்பார்க்கை விலை உறுதிப்பாட்டுடன் திருப்திகரமான வளர்ச்சி நிலைப்பாட்டினையும் அடைவதற்கான நிதி ஒழுங்கினைப் பேணுவதாக இருக்கவேண்டும். இம்முடிவினைக் கருத்திற்கொண்டு 1986 இன் வரவு செலவுத்திட்டம் ரூ. 269,860 இலட்சம் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 சதவீதங்கொண்ட குறையினை மூல மதிப்பீடாகக் கொண்டிருந்தது. எனினும் மந்தமடைந்த பண்டவிலைகள், தேசிய பாதுகாப்பு மீதான உயர்ந்தமட்டத்திலான செலவு போன்ற பல்வேறு பாதகமான அபி விருத்திகள் 1986 இன் நிதிநிலை இலக்குகளை அடைவதனை விரக்தியடையச்செய் தன. இப்பின்னணியில் வரவுசெலவுத் திட்டக்குறையின் மூலமதிப்பீடு 1986 நவெம்பரில் ரூ. 286,710 இலட்சமாக மேல் நோக்கி மீளாய்வு செய்யப்பட்டது. எனினும் வரவு செலவுத்திட்டத்தின் நோக்கில் ஆரம்பத்தில் காணப்பட்ட நம் பிக்கையற்ற எதிர்பார்ப்பின்போதும் தற்போது கிடைக்கத் தக்கதாகவுள்ள 1986 ஆம் ஆண்டிற்கான தற்காலிகத் தரவுகள் மூல மதிப்பீட்டினைவிடக்குறை வான முழுமையான வரவு செலவுத்திட்டக் குறையான ரூ. 255,960 இலட்சத் தினைக்காட்டியது. மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தொடர்புபடுத்தி நோக்கு கையில் இக்குறை 1985 இன் 15.8 சதவீதத்திற்கெதிராக 14.3 சதவீதமாக விளங்கியது. இவ்வாறாக 1986 இன் இறைச் செயலாற்றம் 1985 இனைவிடச் சிறிது முன்னேற்றத்தினைக் காட்டுவதாகத் தெரிகின்றது.

முன்னேற்றமான இறைச் செயலாற்றம் பல காரணிகளால் ஏற்பட்டது. வருமான வரிகள், ஏற்றுமதித்தீர்வைகள், தயாரிப்பு, தயாரிப்பல்லாத நடவடிக் கைகளிலிருந்து எழும் மொத்த விற்பனை வரிகள் என்பனவற்றிலிருந்து கிடைத்த அரசின் அரசிறை குறைவடைந்தபோதிலும் இறக்குமதித்தீர்வைகள், கலால்வரி கள், வரியல்லா அரசிறை என்பனவற்றிலிருந்து கிடைத்த அதிகரித்த சேகரிப்புக்கள் காரணமாக மொத்த அரசிறை அதிகரித்தது. அதேவேளை மாற்றல் கொடுப் பனவுகள், பொருட்கள் பணிகள் மீதான செலவுகள் என்பனவற்றில் ஏற்பட்ட குறைவான வளர்ச்சி காரணமாக மீண்டெழும் செலவின் வளர்ச்சி 1985 இன் 17 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1986இல் 3 சத வீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அண்மை ஆண்டுகளில் வரவு செலவுத்திட்டத்திற்கு வெளியேயான நிதி ஒதுக்கு களிலிருந்து நிதியிடப்படவேண்டியிருந்த முற்பணக் கணக்குத் தொழிற்பாடு களும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டின.

1987 இற்கான வரவு செலவுத்திட்டத்தினைச் சமர்ப்பிக்கையில் பொருளா தாரத்திலுள்ள அமைப்பு ரீதியான பலவீனங்களைத் திருத்தியமைக்கும் உறுதிப் பாட்டிற்கான தேவையை அரசு ஏற்றுக்கொண்டு ஒரு நடுத்தர கால கொள்கை யினூடாக வரவு செலவுத்திட்டப் பற்றுக்குறையினைக் குறைத்துக் கொள்ளவேண் டிய அதன் கடப்பாட்டினை மீண்டும் உறுதிப்படுத்தியது. இந்நிகழ்ச்சித்திட்டத் தின் நியதிகளின்படி முழுமையான வரவு செலவுத்திட்டக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமான 1987 இன் 11 சதவீதத்திலிருந்து 1989 இல் 9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 1987-89 இடைக்காலக் கொள்கை வரைமுறையில் அரசின் அரசிறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20 சதவீதமாகத் தொடர்ந்தும் இருக்குமென எதிர்பாக்கப்பட்ட

---

*இவ் ஆய்வு திறைசேரியினால் வழங்கப்பட்ட தற்காலிகத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டது. இவ்வறிக்கை அச்சாகிக் கொண்டிருக்கும் வேளையில் அரச கணக்குகளில் சில திருத்தங்கள் செய்யப்படுகின்றன. திருத்தப் பட்ட எண் தொகைகள் 1986 பொருளாதார மீளாய்வில் பிரசுரிக்கப்படும்.

வேளையில் செலவு 1987 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 31 சதவீதத்திலிருந்து 1989 இல் படிப்படியாக 29 சதவீதத்திற்குக் குறையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வரையறைக்குள் மீண்டெழும் செலவு/மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரம் 1987-1989 காலப்பகுதியில் 18.5 சதவீதத்தில் பேணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே முழுமையான வரவுசெலவுத் திட்டத்தில் ஏற்படும் படிப்படியான குறைப்பு மூலதனச்செலவினை 1987 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 12.5 சதவீதத்திலிருந்து 1989 இல் 10.5 சதவீதத்திற்குக் குறைப்பதன்மூலம் அடையப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் இலக்குகள் நிதிக்கட்டுப்பாட்டினையும் முன்னேற்றி கடப்பாடுகளையும் குறைக்கும் ஒரு தொடர்ச்சியான வழிமுறையினுல் அடையப்படவேண்டும்.

**இறைத் தொழிற்பாடுகள்**

திறைசேரித் தரவுகளின்படி 1986 இல் அரசின் அரசிறை ரூ. 419,550 இலட்சமாக அமைந்து 8 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தவேளையில் முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளை உள்ளடக்கிய மீண்டெழும் செலவு மொத்தம் ரூ. 346,020 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டினைவிட 1 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. இதனுல் வரவு செலவுத்திட்டத்தின் நடைமுறைக்கணக்கு 1986 இல் ரூ. 73,530 இலட்சம் கொண்ட மிகையைக் கொண்டிருந்தது. இது அண்மை ஆண்டுகளின் நடைமுறைச் செலவின் செலாற்றத்தினைவிடக் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றமானதாகும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நோக்குகையில் அரசின் அரசிறை 1985 இன் 24 சதவீதத்திலிருந்து 1986 இல் 23 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தவேளையில் மூலதனச்செலவு 18.8 சதவீதத்திலிருந்து 18.4 சதவீதத்திற்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளை உள்ளடக்கிய மீண்டெழும் செலவினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமாக நோக்குகையில் இது 1985 இன் 21 சதவீதத்திலிருந்து 1986 இல் 19 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமான படுகடன் மீளக்கொடுப்பனவுகள் முந்திய ஆண்டின் மட்டமான 4.2 சதவீதத்தில் மாற்றமின்றியிருந்தவேளையில் தேறிய பணக்குறை 1985 இன் 11.6 சதவீதத்திலிருந்து 1986 இல் 10.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

தேறிய பணக்குறை பெரும்பாலும் ரூ. 90,460 இலட்சமாக அமைந்த வெளிநாட்டுக்கடன்களினுல் நிதியிடப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமான வெளிநாட்டுக்கடன்கள் 1985 இன் 4.4 சதவீதத்திலிருந்து 1986 இல் 5 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. எனினும் நிதியிடல் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட நன்கொடைகள் 1985 இன் ரூ. 33,070 இலட்சத்திலிருந்து 1986 இல் ரூ. 15,050 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும் இவ்வெண்தொகை குறைவாக மதிப்பிடப்பட்டது போல் தோன்றுகின்றது.*

---

* சில குறிப்பிட்ட அரச முகவர்களிடமிருந்து திறைசேரி முழுமையான தகவல்களைப் பெற்றிருக்காமையினுல் வரவுசெலவுத்திட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட நன்கொடைகள் குறைவாக மதிப்பிடப்பட்டிருக்கலாம். திருத்தப்பட்ட எண்தொகைகள் 1986 இன் பொருளாதார மீளாய்வில் பிரசுரிக்கப்படும்.

வரவு செலவுத்திட்டக்குறையினை நிதியிடுவதற்குக் கிடைக்கத்தக்கதாகவிருந்த உள்நாட்டு மூலவளங்கள் ரூ. 75,170 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டினை விட 10 சதவீதம் குறைவாக விளங்கியது. அதேவேளை வங்கியல்லாத்துறையினுல் திறைசேரி உண்டியல்களுக்கான உதவுதொகைகள் அதிகரித்தமையினுல் வங்கித் தொழில் மூலங்களிலிருந்து வரவு செலவுத்திட்டத்தின் குறைக்கு நிதியிடல் 1985 இன் ரூ. 47,120 இலட்சத்திலிருந்து 1986 இல் ரூ. 30,470 இலட்சத்திற்குக் குறைக்கப்பட்டது.

தற்காலிகத் திறைசேரித் தரவுகளின்படியான இறைத்தொழிற்பாடுகளின் தொகுப்பு முந்திய இரு ஆண்டுகளின் ஒப்பிடத்தக்க தரவுகளுடன் அட்டவணை 1.41 இல் தரப்பட்டுள்ளது.

**அரசிறை**

1986 இல் அரசின் அரசிறை ரூ. 419,550 இலட்சமாக அமைந்தது. இது முந்திய ஆண்டின் அரசிறையான ரூ. 390,100 இலட்சத்தினை விட 8 சதவீதம் கூடுதலானதாகும். 1986 இல் ஏறக்குறைய நான்கில் மூன்றுபங்கு அரசிறையின் வரிகளிலிருந்து கிடைத்தது. 1985 இல் இது 79 சதவீதமாகும். அரசிறையின் முக்கிய இரு மூலங்களான இறக்குமதித் தீர்வைகள், மொத்த விற்பனவு வரிகள் என்பனவற்றிலிருந்து கிடைத்த அரசிறைச் சேகரிப்பு ரூ. 200,670 இலட்சமாக அமைந்து 1986 இன் மொத்த வரி அரசிறையில் மூன்றில் இரண்டு பங்கினை வழங்கியது. மொத்த இறக்குமதிகளின் பெறுமதியில் (கொகாக) சிறிதளவு வீழ்ச்சி ஏற்பட்டபோதிலும் இறக்குமதித்தீர்வையிலிருந்து கிடைத்த சேகரிப்புக்கள் ரூ. 100,140 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டினைவிட 19 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இது முக்கியமாக மசகுஎண்ணெய் இறக்குமதிகளிலிருந்து கிடைத்த உயர்வான தீர்வைச் சேகரிப்புக்கள் காரணமாகவும் உயர்ந்த தீர்வை வீதங்களைக் கொண்ட நுகர்வோர் பொருட்களின் இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்காரணமாகவும் ஏற்பட்டதாகும்.

ரூ.100,520 இலட்சமாக அமைந்த மொத்த விற்பனவு வரிகள் மொத்த வரி அரசிறையில் மூன்றில் ஒருபங்கினை வழங்கின. எனினும் இவ்வரிகளிலிருந்து கிடைத்த சேகரிப்பு தயாரிப்பு, தயாரிப்பல்லா நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த குறைவான வரவுகள் காணமாக முந்திய ஆண்டினைவிட 1 சதவீதத்தினுல் சிறிதளவு குறைவடைந்தது. தயாரிப்பு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த வரிச்சேகரிப்பு 14 சதவீத வீழ்ச்சியைப் பிரதிபலித்த வேளையில் தயாரிப்பல்லா நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த சேகரிப்பு 7 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. இறக்குமதிகள் மீதான மொத்த விற்பனவு வரிகளிலிருந்து கிடைத்த வரவுகள் உயர்ந்த மட்டத்திலான நுகர்வோர் பொருட்களின் இறக்குமதிகள் காரணமாக 15 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தன.

தேயிலைப் பெறுமான விகித வரியிலிருந்து கிடைத்த சேகரிப்புக்களில் 94 சதவீதங்கொண்ட கணிசமான வீழ்ச்சி காணப்பட்டபோதிலும் தேர்ந்த விற்பனவு வரிகளிலிருந்து கிடைத்த மொத்த அரசிறை 1986 இல் 12 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. ரூ. 29,270 இலட்சமாக அமைந்த புகையிலை வரியிலிருந்து கிடைத்த வரவுகள் 56 சதவீதங்கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பதிவு செய்தவேளையில் மதுவகையிலிருந்து கிடைத்த வரவுகள் ரூ. 14,850 இலட்சமாக அமைந்து 35 சதவீத உயர்வினைப் பிரதிபலித்தன. இவ்விடயங்களிலிருந்து

அட்டவணை 1.41

## அரசின் இறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பு

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | மொ. உ.உ. விகிதாசாரங்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1984 | 1985* | 1986* | 1984 | 1985* | 1986* |
| 1- அரசிறை ... | 37,731 | 39,010 | 41,955 | 24.5 | 24.0 | 23.4 |
| வரி அரசிறை ... | (31,215) | (30,745) | (31,693) | (20.3) | (18.9) | (17.7) |
| வரியல்லா அரசிறை ... | (6,516) | (8,265) | (10,262) | (4.2) | (5.1) | (5.7) |
| 2. செலவு ... | —53,592 | —64,685 | —67,551 | — 34.8 | — 39.8 | — 37.6 |
| மீண்டெழும் செலவு ... | (–28,926) | (–33,842) | (–34,772) | (—18.8) | (—20.8) | (—19.4) |
| முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் ... | (—2,916) | (—314) | (170) | (—1.9) | (—0.2) | (0.1) |
| மூலதனச் செலவு ... | (–21,750) | (–30,529) | (–32,949) | (—14.1) | (—18.8) | (—18.4) |
| 3. நடை முறைக் கணக்கு மிகை (+) பற்றுக்குறை (—) | 5,889 | 4,854 | 7,353 | 3.8 | 3.0 | 4.1 |
| 4. மொத்த வரவு செலவுத் திட்ட குறை (—) ... | —15,861 | —25,676 | —25,596 | —10.3 | — 15.8 | —14.3 |
| 5. படுகடன் மீள்கொடுப்பனவு(—) | 2,229 | 6,897 | 7,529 | 1.4 | 4.2 | 4.2 |
| 6. தேறிய பணப் பற்றுக்குறை ... | —13,632 | —18,779 | —18,067 | —8.9 | — 11.6 | 10.1 |
| 7. வரவு செலவு திட்டச்குறையை நிதியிடல் | | | | | | |
| வெளிநாடு ... | 11,251 | 12,205 | 13,575 | 7.3 | 7.5 | 7.1 |
| கடன்கள் ... | (7,958) | (8,898) | (12,070) | (5.2) | (5.5) | (6.7) |
| கொடைகள் ... | (3,293) | (3,307) | (1,505) | (2.1) | (2.0) | (0.8) |
| உள்நாடு ... | 4,610 | 13,470 | 12,022 | 3.0 | 8.0 | 6.7 |
| வங்கி ... | (—2,644) | 7,451) | (2,299) | (—1.7) | (4.6) | (1.3) |
| வங்கியல்லா ... | (6,588) | (8,520) | (8,963) | (4.3) | (5.2) | (5.0) |
| பண நிலுவைகளின் பயன்பாடு | (666) | (—2,501) | (760) | (0.4) | (—1.5) | (0.4) |
| 8. தேறிய பணப் பற்றுக்குறையை நிதியிடல் | | | | | | |
| வெளிநாடு ... | 9,785 | 10,416 | 10,550 | 6.4 | 6.4 | 5.9 |
| கடன்கள் ... | (6,492) | (7,109) | (9,046) | (4.2) | (4.4) | (5.0) |
| கொடைகள் ... | (3,293) | (3,307) | (1,505) | (2.1) | (2.0) | (0.8) |
| உள்நாடு ... | 3,848 | 8,363 | 7,517 | 2.5 | 5.1 | 4.2 |
| வங்கி ... | (—2,760) | (7,212) | (2,287) | (—1.8) | (4.4) | (1.3) |
| வங்கியல்லா ... | (5,942) | (3,652) | (4,470) | (3.9) | (2.2) | (2.5) |
| பண நிலுவைகளின் பயன்பாடு | (666) | (—2,501) | (760) | (0.4) | (— 1.5) | (0.4) |
| 9. வங்கித் தொழில் முறையி லிருந்தான் தேறிய கடன்பாடு ... | —2,095 | 4,712 | 3,047 | —1.4 | 2.9 | 1.7 |

* தற்காலிகமானவை.

மூலங்கள்: திறைசேரி.
இலங்கை மத்திய வங்கி.

கிடைத்த வரவுகளில் ஏற்பட்ட கணிசமான வளர்ச்சி 1985 நவெம்பரில் கலால்வரிகள் மேல் நோக்கித் திருத்தியமைக்கப்பட்டமையினுல் ஏற்பட்டதாகும். தேயிலைக்கான மந்தமான விலைகள், இதன்விளைவாக வரி விதிக்கப்படும் விலைமட்டம் கிலோக்கிறும் ஒன்றுக்கு ரூ. 40 இலிருந்து கிலோக்கிறும் ஒன்றுக்கு ரூ. 32 ஆகக் குறைக்கப்பட்டமை என்பன தேயிலைப் பெறுமானவிகிதவரியிலிருந்து கிடைத்த சேகரிப்புக்களை 1978 இலிருந்து கிடைத்த ஆகக்குறைந்த மட்டமான ரூ. 620 இலட்சத்திற்குக் குறைவடையச் செய்தது.

ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த முழுமையான அரசிறைச் சேகரிப்பு ரூ. 15,730 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டினைவிட 16 சதவீதங்கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. தேயிலை ஏற்றுமதிகளின் அளவு 1986 இல் 5 சதவீதத்தினால் அதிகரித்தபோதிலும் முக்கியமாக எல்லாத் தேயிலைகள் மீதான ஏற்றுமதித்தீர்வை 1985 நவெம்பரில் கிலோக்கிரும் ஒன்றுக்கு ரூ. 2 இனால் குறைக்கப்பட்டமையினால் ஏற்றுமதித் தீர்வைகளிலிருந்து கிடைத்த வரவுகள் 21 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. மறுபுறம் இறப்பர் ஏற்றுமதிகளில் குறைப்பு ஏற்பட்டபோதிலும் ரூபா நியதிகளிலான உயர்வான விலைகள் காரணமாக இறப்பர் ஏற்றுமதித்தீர்வையிலிருந்து கிடைத்த வரவுகள் 1986 இல் 21 சதவீதத்தினால் அதிகரித்தன. தெங்கு ஏற்றுமதிகளின் அளவு 18 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த போதிலும் தெங்கு விலைகள் மிகக்கூடுதலாக வீழ்ச்சியடைந்தமையினாலும், ஏற்றுமதித்தீர்வைகள் கீழ் நோக்கித் திருத்தியமைக்கப்பட்டமைமையாலும் ஏற்றுமதித்தீர்வைச் சேகரிப்புக்கள் மூன்றிலொரு பங்கினால் வீழ்ச்சியடைந்தன.

கூட்டு, கூட்டல்லா வருமானத்திலிருந்து கிடைத்த வரவுகள் ரூ. 47,870 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டின் சேகரிப்பான ரூ. 55,860 இலட்சத்தினை விட 1986 இல் 14 சதவீத வீழ்ச்சியைக்காட்டின. கூட்டு வருமானவரிகள் ரூ. 32,740 இலட்சமாக அமைந்து 21 சதவீத வீழ்ச்சியைப்பதிவுசெய்தன. இது வரி மட்டத்தில் ஏற்பட்ட குறைப்பினால் முக்கியமாகத் தேயிலை, தெங்கு, விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் குறிப்பாகப் பெருந்தோட்ட வேளாண்மையில் ஏற்பட்டது. வரி விலக்கு எல்லை ஆண்டுக்கு ரூ. 24,000 இலிருந்து ரூ. 27,000 இற்கு உயர்த்தப்பட்டமை, வரிப்பிரிவுகள் விரிவுபடுத்தப்பட்டமை என்பன 1986 இல் தனியாள் வருமானவரிச் சேகரிப்புகளில் ஏற்பட்ட 6 சதவீத அதிகரிப்பிற்கு காரணமாயின. அரசின் அரசிறைச் செயலாற்றக் குறிகாட்டிகள் அட்டவணை 1.42 இல் தரப்பட்டுள்ளன.

**செலவு**

1986 இல் அரசின் செலவு ரூ. 675,510 இலட்சமாக அமைந்து 4 சதவீத அதிகரிப்பினைக்காட்டியது. இது 21 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த 1985 இன் செலவு வளர்ச்சியிலிருந்து கணிசமான வீழ்ச்சிப் போக்குடையதாகும். இதன் விளைவாக செலவு/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதாசாரம் 1985 இன் 40 சதவீதத்திலிருந்து 1986 இல் 38 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

மீண்டெழும் செலவு (முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் நீங்கலாக) மொத்தம் ரூ. 347,720 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டின் 17 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 3 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. தற்காலிகத் தரவுகளின்படி 1986 இல் தனியார் ஊதியங்கள் ரூ. 89,790 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டினைவிட 19 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தன. மொத்த மீண்டெழும் செலவில் தனியார் ஊதியங்கள் 1985இல் 22 சதவீதத்திற்கு வகை கூறியமைக்கு எதிராக 1986 இல் 26 சதவீதத்திற்கு வகைகூறின. அரசின் படுகடன் மீதான மொத்த வட்டிக்கொடுப்பனவுகள் ரூ. 92,940 இலட்சமாக அமைந்து மொத்த மீண்டெழும் செலவில் 27 சதவீதத்திற்கு வகைகூறின. இது முந்திய ஆண்டினைவிட 12 சதவீதம் கூடுதலானதாகும். ஓய்வூதியக்கொடுப்பனவுகள் 9 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் பொருட்கள் பணிகள் கொள்வனவு, ஏனைய நடைமுறை மாற்றல்கள் என்பன மீதான மீண்டெழும் செலவு ரூ. 135,150 இலட்சமாக அமைந்து 1986 இல் 11 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

அட்டவணை 1.42


## அரசின் இறைத் தொழிற்பாடுகள் (அ)

| | வளர்ச்சி வீதங்கள் (%) | | | மொ.உ.உ. யின் சதவீதம் (%) | | | மொத்த அரசிறையின் (%) சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1984 | 1985 | 1986 | 1984 | 1985 | 1986 | 1984 | 1985 | 1986 |
| 1. வரி அரசிறை ... | 50.8 | — 1.5 | 3.5 | 20.3 | 18.9 | 17.7 | 82.7 | 78.8 | 75.9 |
| 1.1. உற்பத்தியினதும் செலவினதும் வரிகள் ... | 48.5 | — 2.4 | 7.4 | 16.7 | 15.4 | 15.0 | 68.0 | 64.2 | 64.1 |
| 1.1.1. பொதுவான விற்பனைகளினதும் மொத்தவிற்பனைகளினதும் வரிகள் ... | 30.8 | 25.1 | — 1.3 | 5.3 | 6.3 | 5.6 | 21.6 | 26.1 | 24.0 |
| 1.1.2 தேர்ந்தெடுக்கப்பட்ட விற்பனை வரிகள் ... | 79.2 | —30.6 | 11.5 | 3.8 | 2.5 | 2.5 | 15.3 | 10.3 | 10.7 |
| 1.1.3 இறக்குமதித் தீர்வைகள் ... | 64.3 | 5.7 | 19.3 | 5.2 | 5.2 | 5.6 | 21.0 | 21.5 | 23.9 |
| 1.1.4 ஏற்றுமதித் தீர்வைகள் ... | 29.1 | —41.0 | —16.0 | 2.1 | 1.2 | 0.9 | 8.4 | 4.8 | 3.8 |
| 1.1.5 உரிம வரிகள் ... | 3.2 | — 3.1 | 51.6 | 0.1 | 0.1 | 0.2 | 0.5 | 0.5 | 0.7 |
| 1.1.6 சொத்து மாற்றல் வரி ... | 21.1 | — 4.7 | 30.2 | 0.3 | 0.2 | 0.3 | 1.1 | 1.0 | 1.2 |
| 1.2 கூட்டு கூட்டல்லா வருமான வரிகள் ... | 62.7 | 1.9 | 14.3 | 3.6 | 3.4 | 2.6 | 14.5 | 14.3 | 11.4 |
| 1.2.1 கூட்டு ... | 50.3 | 11.9 | —21.3 | 2.4 | 2.6 | 1.8 | 9.8 | 10.7 | 7.8 |
| 1.2.2 கூட்டல்லா ... | 97.5 | —19.1 | 6.2 | 1.1 | 0.9 | 0.8 | 4.7 | 3.6 | 3.6 |
| 1.3 மூலதன மாற்றல் வரிகள் ... | 34.4 | 35.4 | 27.9 | ... | 0.1 | 0.1 | 0.2 | 0.3 | 0.3 |
| 2. வரியல்லா வருமானம் ... | 44.2 | 26.8 | 21.0 | 4.2 | 5.1 | 5.7 | 17.3 | 21.2 | 24.1 |
| 2.1 அரச வர்த்தக முயற்சிகளிலிருந்தான மொத்த பெறுகைகள் ... | 42.0 | 15.5 | — 3.0 | 1.2 | 1.3 | 1.2 | 4.9 | 5.5 | 5.0 |
| 2.2 வட்டி இலாபங்களும் பங்கு இலாபங்களும் ... | 143.1 | 77.2 | 50.0 | 1.1 | 1.8 | 2.4 | 4.3 | 7.4 | 10.3 |
| 2.3 விற்பனைகளும் கட்டணங்களும் ... | 24.0 | 88.7 | —34.0 | 0.3 | 0.5 | 0.3 | 1.2 | 2.1 | 1.3 |
| 2.4 சமூக பாதுகாப்பு உதவு தொகைகள் ... | 19.0 | 6.0 | 19.1 | 0.1 | 0.1 | 0.1 | 0.2 | 0.2 | 0.3 |
| 2.5 ஏனைய நடைமுறை மாற்றல்கள் ... | —30.0 | 73.0 | 36.9 | 0.2 | 0.3 | 0.4 | 0.8 | 1.3 | 1.7 |
| 2.6 மூலதனப்பொருட்களின் விற்பனை ... | 32.6 | 15.3 | 53.3 | ... | ... | ... | ... | ... | 0.1 |
| 2.7 கடன்களினதும் முற்பணங்களினதும் மீள் கொடுப்பனவுகள் ... | 253.0 | —52.1 | 101.6 | 0.3 | 0.2 | 0.3 | 1.4 | 0.6 | 1.2 |
| 2.8 மத்திய வங்கி மாற்றல் ... | 10.0 | — 9.1 | 18.6 | 1.1 | 0.9 | 1.0 | 4.4 | 3.8 | 4.2 |
| மொத்தம் ... | 49.7 | 3.4 | 7.7 | 24.5 | 24.0 | 23.4 | 100.0 | 100.0 | 100.0 |

மூலங்கள் : பொதுத் திறைசேரி,
இலங்கை மத்திய வங்கி.

(அ) அரச அரசிறையின் விபரமான பகுப்பாய்வு புள்ளிவிபரப் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது.

## அரசின் அரசிறையும் செலவும்




இலங்கை மத்திய வங்கி.

மொத்த மூலதனச்செலவு ரூ. 329,490 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டினை விட 8 சதவீத அதிகரிப்பைக்காட்டியது. ரூ. 75,290 இலட்சங் கொண்ட படுகடன் மீளக்கொடுப்பனவுகள் நீக்கப்படுமிடத்து தேறிய மூலதனச் செலவு ரூ. 254,200 இலட்சமாக அமைந்தது. இது முந்திய ஆண்டின் ரூ. 236,320 இலட்சங்கொண்டதேறிய மூலதனச் செலவுடன் ஒப்பிடத்தக்கது. இவ்வாண்டின் ரூ. 54,220 இலட்சங்கொண்ட துணை ஒதுக்கு மூலதனச் செலவு, மூல வரவு செலவுத்திட்ட ஒதுக்கான ரூ. 229,900 இலட்சத்தினை ரூ. 284,120 இலட்சத்திற்கு உயர்த்தியது. எனினும் தற்காலிகத் தரவுகள் மொத்த ஒதுக்கில் முந்திய ஆண்டின் 8 சதவீதக்குறைப் பயன்பாட்டுடன் ஒப்பிடுகையில் 7 சதவீதக் குறைப்பயன்பாடு இருந்தமையைக் காட்டுகின்றன.

அமைச்சு ரீதியான பகுப்பின்படி பாதுகாப்பு அமைச்சு (ரூ. 54,940 இலட்சம்), நிதி திட்டமிடல் அமைச்சு (ரூ. 46,490 இலட்சம்) மகாவலி அபிவிருத்தி அமைச்சு (ரூ. 39,880 இலட்சம்) என்பன 1986 இன் மொத்த மூலதனச்செலவில் 53 சதவீதத்திற்கு வகைகூறின. காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் மூலதனச் செலவு ரூ. 13,460 இலட்சமாக அமைந்தது. இது பெரும்பாலும் நில்வள கங்கை வெள்ளப் பாதுகாப்புத் திட்டம் தொடர்பானதாகும். உள்ளூராட்சி வீடமைப்புக் கட்டடவாக்க அமைச்சு ரூ. 16,770 இலட்சத்தினைப் பயன்படுத்தியது. இதில் ரூ. 6,550 இலட்சம் உள்ளூராட்சி பிரதேசங்களின் நீர் வழங்கல் வசதிகளின் கட்டுமானத்தில் ஏற்பட்டது. மேலும் ரூ. 4,650 இலட்சம் சேரிப்புறவாசிகளுக்கான குறைந்த செலவிலான வீடுகளை அமைப்பதற்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் பயன்படுத்தப்பட்டது. போக்குவரத்து அமைச்சின் மூலதனச்செலவு ரூ. 10,610 இலட்சமாக அமைந்தது. இதில் 65 சதவீதம் புகைவண்டிகளுக்கான பொறித்தொகுதிகளைக் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டது. ஏனைய முக்கிய செலவுகளைக் கொண்ட அமைச்சுக்களாக தேசிய பாதுகாப்பு (ரூ. 9,420 இலட்சம்), பெருந்தெருக்கள் (ரூ. 8,800 இலட்சம்), அஞ்சல் தொலைத்தொடர்புகள் (ரூ. 6,000 இலட்சம்) என்பன விளங்கின.

**வரவு செலவுத்திட்டக் குறையை நிதியிடல்**

தற்காலிகத் தரவுகளின்படி 1986 இன் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகள் ரூ. 255,960 இலட்சங்கொண்ட மொத்தப்பற்றுக் குறையினை ஏற்படுத்தி முந்திய ஆண்டினைவிட சிறிதளவு வீழ்ச்சியினைப் பதிவுசெய்தன. மொத்த அரச செலவு தொடர்பான மொத்தக் குறை 1985 இன் 40 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 38 சதவீதமாக விளங்கியது. ரூ. 75,290 இலட்சங்கொண்ட மொத்தப்படுகடன் மீளக் கொடுப்பனவுகளுடன் 1986 இன் இறைத் தொழிற்பாடுகள் ரூ. 180,670 இலட்சங்கொண்ட தேறிய பணக்குறையைப் பதிவு செய்தன. இது முந்திய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ. 187,790 இலட்சங் கொண்ட குறையுடன் பெரும்பாலும் ஒத்ததாகும்.

தேறிய பணக்குறையை நிதியிடுவதில் அரசு கடன்களாகவும் நன்கொடைகளாகவும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து ரூ. 105,500 இலட்சத்தினைப் பெற்ற வேளையில் உள்நாட்டு மூலங்களிலிருந்து ரூ. 75,170 இலட்சம் பெறப்பட்டது. தேறிய வெளிநாட்டு கடன்பாடுகளிலிருந்து பெறப்பட்ட ரூ. 90,460 இலட்சம் முந்திய ஆண்டினைவிட 27 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்து தேறிய பணக்குறையில் 1985 இல் 38 சதவீதத்தினைப் பிரதிபலித்தமையுடன் ஒப்பிடுகையில் 1986

இல் ஏறக்குறைய அரைப்பங்கிற்கு வகை கூறியது. எனினும் குறையை நிதியிடுவதில் வெளிநாட்டு நன்கொடைகளின் பயன்பாடு 1985 இன் ரூ. 33,070 இலட்சத்திலிருந்து 1986 இல் ரூ. 15,050 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்து தேறிய பணக்குறையில் முந்திய ஆண்டின் 18 சதவீதமாக அமைந்தமைக்கு எதிராக 8 சதவீதத்திற்கு வகைகூறியது.

குறையை நிதியிடுவதில் உள்நாட்டு மூலங்களிலிருந்து மூலவளங்களைப் பெறுவதில் அரசு பெரும்பாலும் வங்கியல்லாக் கடன்பாடாக ரூ.44,700 இலட்சத்தினை நாடியது. வங்கிக்கடன்பாடுகள் ரூ. 30,470 இலட்சமாக அமைந்தன. இதனால் உள்நாட்டு வங்கியல்லாக் கடன்பாடுகள் தேறிய பணக்குறையை நிதியிடுவதில் பெரும்பாலும் நான்கில் ஒரு பங்கினை வழங்கி முந்திய ஆண்டின் இத்தகைய கடன்பாடுகளைவிட 22 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. ஊழியர் சேம நிதியத்தினாலும், தேசிய சேமிப்பு வங்கியினாலும் ரூபாக்கடன் நிகழ்ச்சித்திட்டத்திற்கும், இலங்கைமின்சபையினால் திறைசேரி உண்டியல் வழங்கல்களுக்கும் உதவப்பட்டமையே குறையை நிரப்புவதில் வங்கியல்லா மூலங்களிலிருந்து நிதியிடப்பட்ட முக்கிய உதவுதொகைகளாகும்.


வங்கித்தொழில் முறையிடமிருந்து அரசு பெற்ற தேறிய கடன்பாடு 1986 இல் ரூ. 30,470 இலட்சத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இது முந்திய ஆண்டின் கடன்பாடுகளான ரூ. 47,120 இலட்சத்தினைவிட 34 சதவீதம் குறைவானதாகும். மொத்த வங்கிக்கடன்பாடுகளில் திறைசேரி உண்டியல்கள் ரூ. 18,920 இலட்சத்தினை வழங்கியவேளையில், அரசிற்கான மத்தியவங்கியின் முற்பணங்கள் மேலும் ரூ. 4,070 இலட்சத்தினை வழங்கின. குறையை நிதியிடுவதில் 1985 இல் கட்டியெழுப்பப்பட்ட காசு, வங்கி நிலுவைகள் ரூ. 7,600 இலட்சங் கொண்ட அளவிற்குப் பயன்படுத்தப்பட்டன.

**அரசின் படுகடன்**

1986 முடிவில் அரசின் வெளிநின்ற படுகடன் ரூ. 1,562,930 இலட்சமாக அமைந்து 19 சதவீதம் கூடுதலாக விளங்கியது. இது சென்ற ஆண்டின் 24 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடத்தக்கது. உள்நாட்டுப்படுகடன் ரூ. 700,850 இலட்சமாக அமைந்தவேளையில் செலாவணிவீத மாற்றங்களிலிருந்து எழும் ரூ. 95,430 இலட்சம் கொண்ட மேலதிகப் பொறுப்பினையும் உள்ளடக்கிய வெளிநாட்டுப்படுகடன் ரூ. 862,080 இலட்சமாக விளங்கியது. அரசின் வெளிநின்ற படுகடனின் உள்ளடக்கம் முந்திய ஆண்டின் ஒப்பிடத்தக்க எண்தொகைகளுடன் அட்டவணை 1.43 இல் தரப்பட்டுள்ளது.

மொத்த உள்நாட்டுப்படுகடன் 1985 இன் 21 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1986 இல் 11 சதவீதத்தினால் அதிகரித்தது. உள்நாட்டுப்படுகடனின் வளர்ச்சியில் ஏற்பட்ட குறைப்பு முக்கியமாக 1986 இல் திறைசேரி உண்டியல்களிலும் ரூபாப்பிணைகளிலுமிருந்து பெறப்பட்ட குறைவான கடன்பாடுகள் காரணமாக ஏற்பட்டதாகும். எனினும் குறுங்காலக் கடன்பாடுகள் 1986 இல் நீண்டகாலக் கடன்பாடுகளைவிடக் கூடுதலாக விளங்கியதன்விளைவாக மொத்த உள்நாட்டுப்படுகடனில் குறுங்காலப்படுகடனின் பங்கு 1985 இன் 42 சதவீதத்திலிருந்து 1986 இல் 44 சதவீதத்திற்கு அதிகரித்தது.


## அரச படுகடனின் உள்ளடக்கம்*




இலங்கை மத்திய வங்கி.

* கடன்கரைப்பு நிதியங்கள் நீங்கலாக அரச மொத்தப் படுகடன்.

உள்நாட்டுப் படுகடனின் உள்ளடக்கம்*




இலங்கை மத்திய வங்கி.

* கடன்கரைப்பு நிதியங்கள் நீங்கலாக மொத்த உள்நாட்டுப் படுகடன்.

## அட்டவணை 1.43

## அரச படுகடன்

| மூலம் | பத்து இலட்சம் ரூபாய்கள் — வெளி நிற்கும் தொகை 1985 | வெளி நிற்கும் தொகை 1986 | மாற்றம் 1985 | மாற்றம் 1986 | வெளிநிற்கும் கடன்களின் சதவீத மாற்றம் 1985 | சதவீத மாற்றம் 1986 |
|---|---|---|---|---|---|---|
| 1. உள்நாட்டுப் படுகடன் ... | 63,196.7 | 70,084.3 | 10,959.8 | 6,887.6 | 21.0 | 10.9 |
| 1.1 நடுத்தர நீண்டகால படுகடன் ... | 36,689.1 | 39,277.2 | 3,365.3 | 2,588.1 | 10.1 | 7.1 |
| 1.1.1 ரூபாக் கடன்கள் ... | 36,570.1 | 39,129.8 | 3,342.8 | 2,559.7 | 10.1 | 7.0 |
| 1.1.2 நிருவாகக் கடன்கள் ... | 119.0 | 147.4 | 22.5 | 28.4 | 23.6 | 23.9 |
| 1.2 குறுங்காலப் படுகடன் ... | 26,507.6 | 30,207.1 | 7,594.0 | 4,299.5 | 40.2 | 16.2 |
| 1.2.1 திறைசேரி உண்டியல்கள் ... | 22,280.0 | 26,172.6 | 7,420.0 | 3,892.6 | 49.9 | 17.5 |
| 1.2.2 வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் ... | 9.4 | 9.0 | — 0.2 | — 0.4 | — 2.1 | — 4.2 |
| 1.2.3 மத்திய வங்கியின் முற்பணங்கள் ... | 4,218.2 | 4,625.5 | 174.7 | 407.3 | 4.3 | 9.7 |
| 2. வெளிநாட்டுப் படுகடன்கள் ... | 67,673.2 | 86,208.3 | 13,992.4 | 18,535.1 | 26.1 | 27.4 |
| 2.1 செய்யற்றிட்டக் கடன்கள் ... | 36,405.9 | 50,417.9 | 10,434.9 | 14,012.0 | 40.2 | 38.5 |
| 2.2 பண்டம் ... | 22,372.9 | 27,765.8 | 39,46.6 | 5,392.9 | 21.4 | 24.1 |
| 2.3 ஏனையவை ... | 8,894.4 | 8,024.6 | — 389.1 | — 869.8 | 4.2 | — 9.8 |
| மொத்தம் | 130,869.9 | 156,952.6 | 24,952.2 | 25,422.7 | 23.6 | 19.4 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

அரசினால் பெறப்பட்ட குறுங்காலக்கடன்பாடுகளில் திறைசேரி உண்டியல்கள் தொடர்ந்தும் முக்கிய கருவியாக விளங்கின. திறைசேரி உண்டியல்களுக்கு எதிராகப் பெறப்பட்ட மொத்தக்கடன்பாடுகள் முந்திய ஆண்டின் ரூ. 74,200 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1986 இல் ரூ. 38,930 இலட்சமாக விளங்கின. எனவே திறைசேரி உண்டியல்களின் வெளிநின்ற பொறுப்பு 1985 இறுதியின் ரூ. 222,800 இலட்சத்திலிருந்து 1986 இன் இறுதியில் ரூ. 261,730 இலட்சத்திற்கு உயர்வடைந்தது. திறைசேரி உண்டியல்களின் பேரில் எற்பட்ட அதிகரித்த பொறுப்பிற்கு இடமளிக்கும் வகையில் திறைசேரி உண்டியல்களின் வெளிநின்ற பொறுப்பிற்கான அங்கீகரிக்கப்பட்ட உச்ச எல்லை 1986 நவெம்பர் 21 ஆம் நாளிலிருந்து ரூ. 250,000 இலட்சத்திலிருந்து ரூ. 350,000 இலட்சத்திற்கு உயர்த்தப்பட்டது.

திறைசேரி உண்டியல்கள்மீது வங்கியல்லாத்துறையின் முதலீடுகள் ரூ. 22,490 இலட்சமாக அமைந்தன. இதில்இலங்கை மின்சபை ரூ. 18,380 இலட்சத்திற்கு வகைகூறியது. தேசிய சேமிப்பு வங்கி, பல்வேறு சேமநிதியங்கள், நம்பிக்கை நிதியங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய ஏனைய முதலீட்டாளர்களின் உதவுதொகைகள் ரூ. 4,110 இலட்சமாக அமைந்தன. இதன் விளைவாக வங்கியல்லாத்துறையின் திறைசேரி உண்டியல்களின் உடைமை 1985 இன் ரூ. 16,590

இலட்சத்திலிருந்து 1986 இல் ரூ. 39,080 இலட்சத்திற்கு கணிசமாக அதிகரித்து வங்கியல்லாத்துறை வசமிருந்த திறைசேரி உண்டியல்களது வெளிநின்ற பங்கினை 15 சதவீதத்திற்கு உயர்த்தியது.

அரசிற்கான மத்தியவங்கியின் தற்காலிக முற்பணங்களது அதிகரிப்பு 1986 இல் ரூ. 4,070 இலட்சமாக அமைந்தவேளையில் 1980 இறுதியில் அதன் வெளி நின்ற பொறுப்பு ரூ. 46,260 இலட்சமாக விளங்கியது. இது 1980 இலும் 1983 இலும் அரசிற்கு மத்தியவங்கியின் சிறப்புக்கடன்களாக வழங்கப்பட்ட ரூ. 5,850 இலட்சத்தினையும் உள்ளடக்கியிருந்தது.

பெரும்பாலும் எல்லா நடுத்தர, நீண்டகாலக், கடன்களையும் கொண்டிருந்த ரூபாக்கடன்களின் பேரிலான வெளிநின்ற படுகடன் முந்திய ஆண்டின் 10 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1986 இல் 7 சதவீதத்தினால் அதிகரித்தது. ரூ. 77,770 இலட்சம் ரூபாப் பிணைகளின் விற்பனைமூலம் பெறப்பட்டபோதிலும் ரூபாப்பிணைகளின் பேரிலான வெளிநின்ற பொறுப்பு 1986 இல் ரூ. 25,600 இலட்சத்தினால் மட்டும் அதிகரித்தது. இது ரூ. 52,160 இலட்சங்கொண்ட முதிர்ச்சியடைந்த பிணைகள் மீதான கடப்பாடுகள் காரணமாக ஏற்பட்டதாகும்.

கடந்த காலத்தினைப் போன்று ஊழியர் சேம நிதியமும் தேசிய சேமிப்பு வங்கியும் பிணைகளுக்கான முக்கிய முதலீட்டாளர்களாகத் தொடர்ந்தும் விளங்கின. ஊழியர் சேம நிதியத்தின் முதலீடு 1985 இன் ரூ. 44,180 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1986 இல் ரூ. 51,180 இலட்சமாக விளங்கியது. ரூபாப்பிணைகளிலான ஊழியர் சேம நிதியத்தின் முதலீடுகள் மொத்தமாக மிதக்கவிடப்பட்ட ரூபாக்கடன்களில் முந்திய ஆண்டில் 42 சதவீதமாக விளங்கியமையுடன் ஒப்பிடுகையில் 1986இல் 66 சதவீதமாக விளங்கியது. உறுப்பினர்களிடமிருந்து கிடைத்த அதிகரித்த உதவுதொகைகளும், கடந்த கால முதலீடுகளிலிருந்து கிடைத்த வருமானமும் ஊழியர் சேம நிதியத்திற்கு அதன் முதலீட்டினை உயர்த்த உதவியது.

தேசிய சேமிப்பு வங்கி ரூபாப்பிணைகளில் 1985 இல் ரூ. 56,300 இலட்சத்தினை முதலிட்டமையுடன் ஒப்பிடுகையில் 1986 இல் ரூ. 23,830 இலட்சத்தினை முதலிட்டது. முதலீட்டில் ஏற்பட்ட குறைப்பு 1986 இல் தேசிய சேமிப்பு வங்கியின் முதலிடத்தக்க மூலவளங்கள் வீழ்ச்சியடைந்தமையினால் ஏற்பட்டதாகும். தேசிய சேமிப்பு வங்கியினால் சேகரிக்கப்பட்ட மொத்தச் சேகரிப்புக்கள் 1985 இன் ரூ.16,450 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1986இல் ரூ. 9,250 இலட்சமாக விளங்கியது. கடந்த கால முதலீடுகளிலிருந்து கிடைத்த வரவுகள் ரூ. 17,330 இலட்சமாக அமைந்தவேளையில் முதிர்ச்சியடைந்தவற்றிலிருந்து கிடைத்த வரவுகள் ரூ. 15,040 இலட்சத்தினை வழங்கின.

ஏனைய மூலங்களிலிருந்து ரூபாப்பிணைகளில் செய்யப்பட்ட மொத்த முதலீடுகள் ரூ. 2,760 இலட்சமாக அமைந்தன. இவை ஓய்வூதியங்களும் சேமநிதியங்களும் ( ரூ. 2,190 இலட்சம்), தேசிய காப்புறுதிக்கூட்டுத்தாபனம் (ரூ. 400 இலட்சம்), தேசிய வீடமைப்பு கடன்கரைப்பு நிதியம் (ரூ. 170 இலட்சம்) என்பவற்றை உள்ளடக்கியிருந்தன.

## வெளிநாட்டுப் படுகடன்

1986இல் மொத்த வெளிநாட்டுக் கடன்பாடுகள் ரூ. 120,600 இலட்சமாக விளங்கின. சி.எ.உ. நியதிகளிலான இவ் வெளிநாட்டுக் கடன்பாடுகள் முந்திய ஆண்டினை விட 1986 இல் 1 சதவீதத்திஞல் மட்டும் உயர்வடைந்தபோதிலும் செலாவணி வீத மாற்றங்கள் காரணமாக ரூபாய்நியதிகளில் 36 சதவீதத்திஞல் அதிகரித்தன. மொத்தமாக ரூ. 30,240 இலட்சங்கொண்ட வெளி நாட்டுச் கடன்பாடுகளின் மீளக் கொடுப்பனவுகளுடன் தேறிய வெளிநாட்டுக் கடன்பாடு ரூ. 90,360 இலட்சமாக அமைந்தது. செலாவணி வீத மாற்றங்கள் காரணமாக ஒரு புறம் ரூ. 430 இலட்சங்கொண்ட முந்திய கடன்களின் நீக்கமும் மறுபுறம் ரூ. 95,430 இலட்சங்கொண்ட மேலதிகப்பொறுப்புக்களும் காணப்பட்டது. எல்லாமாக வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 1986இல் ரூ. 185,350 இலட் சத்திஞல் அதிகரித்தது.

1986 இறுதியில் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் ரூ. 504,180 இலட்சமாக அமைந்து மொத்த வெளிநாட்டுப்படுகடனில் 1985 இன் 54 சதவீதமாக விளங்கியமையுடன் ஒப்பிடுகையில் 59 சதவீதத்திற்கு வகைகூறி யது. வெளிநின்ற பண்டக்கடன்களின் பங்கு 33 சதவீதத்திலிருந்து 1986 இல் 32 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் ஏனைய வெளிநாட்டுக்கடன்களின் பங்கு 13 சதவீதத்திலிருந்து 9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.


செயற்றிட்டக்கடன்களின் பேரிலான தேறிய வெளிநாட்டுக்கடன்பாடுகள் 1986 இல் ரூ. 90,100 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டினைவிட 28 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தன. 1986 இல் செயற்றிட்டக்கடன்களின் கீழான மொத்த தேறிய வெளிநாட்டுக் கடன்பாடுகளில் வர்த்தகக்கடன்பாடுகள் ரூ.4,320 இலட்சத்திற்கு வகை கூறின. இது முந்திய ஆண்டின் அளவினை ஒத்ததாக விளங்கியது. பண்டக்கடன்களின் கீழான தேறிய கடன்பாடுகள் ரூ. 13,480 இலட்சமாகும். இது முந்திய ஆண்டினைவிட 50 சதவீதம் அதிகமாகும். 1986இல் ஏனைய கடன்களின் கீழ் ரூ.13,220 இலட்சங்கொண்ட தேறிய மீளக் கொடுப்பனவு காணப்பட்டது.

## வட்டிக் கொடுப்பனவுகள்

அரச படுகடன் மீதான மொத்த வட்டிக்கொடுப்பனவுகள் ரூ.92,940 இலட்ச மாக விளங்கியது. இது முந்திய ஆண்டின் 14 சதவீதங்கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 12 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது. உள்நாட்டுப்படுகடன் மீதான வட்டிக்கொடுப்பனவு ரூ. 71,590 இலட்சமாக அமைந்தவேளையில் வெளி நாட்டுப்படுகடன்மீதான தொகை ரூ.21,350இலட்சமாக விளங்கியது.உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் முந்திய ஆண்டின் 10 சதவீத அதிகரிப் புடன் ஒப்பிடுகையில் 11 சதவீதத்திஞல் அதிகரித்தவேளையில் வெளிநாட்டுப்படு கடன் மீதான வட்டி 1985 இன் 24 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 15 சதவீதத்திஞல் அதிகரித்தது.

1986 இன் மொத்த வட்டிக் கொடுப்பனவுகளில் 77 சதவீதத்திற்கு வகைகூறும் உள்நாட்டுப்படுகடன் மீதான வட்டிக்கொடுப்பனவு ரூபாக்கடன் கள் மீதான ரூ. 45,540 இலட்சத்தினையும், திறைசேரி உண்டியல்கள் மீதான ரூ. 26,010 இலட்சத்தினையும், நிருவாக்கடன்பாடுகள் மீதான ரூ. 40 இலட்சத் தினையும் உள்ளடக்கியிருந்தன. ரூபாப்பிணைகள் மீதான வட்டிக்கொடுப்பனவுகள்

## வெளிநாட்டுப் படுகடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி.

1985 இன் 9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1986 இல் 8 சதவீதத்தினுல் உயர்வடைந்தன. குறைவான வட்டிக்கடப்பாடு ரூபாப்பிணைகள் மீதான வட்டிவீதம் 1985 இன் ஆண்டுக்கு 14 சதவீதத்திலிருந்து 1986 இல் ஆண்டுக்கு 12 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டமையினுல் ஏற்பட்டதாகும். வட்டிவீதம் வீழ்ச்சியடைந்தபோதிலும் திறைசேரி உண்டியல்கள்மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 16 சதவீதத்தினுல் அதிகரித்தன. இது முக்கியமாக 1986 இல் பெருமளவிலான திறைசேரி உண்டியல்களுக்கு வட்டிசெலுத்தப்படவேண்டியிருந்தமையினுல் ஏற்பட்டதாகும்.

வெளிநாட்டுப்படுகடன் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் செயற்றிட்டக் கடன்கள் மீதான ரூ. 9,070 இலட்சத்தையும், பண்டக்கடன்கள் மீதான ரூ. 6,930 இலட்சத்தையும், ஏனைய கடன்கள்மீதான ரூ.5,350 இலட்சத்தையும் உள்ளடக்கியிருந்தன. வெளிநாட்டுப்படுகடன்மீதான மொத்த வட்டிக்கொடுப்பனவு வர்த்தகக் கடன்கள் மீதான ரூ. 8,010 இலட்சத்தையும் உள்ளடக்கியிருந்தது.

அரசின் படுகடன்மீதான மொத்தப்படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 1985 இன் ரூ. 152,310 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1986 இல் ரூ. 168,230 இலட்சமாக அமைந்தன. ரூ. 75,290 இலட்சமாக அமைந்த கடன்தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 9 சதவீதம் கூடுதலாக விளங்கியவேளையில் ரூ. 92,940 இலட்சமாக அமைந்த வட்டிக்கொடுப்பனவுகள் முந்திய ஆண்டினைவிட 12 சதவீதம் கூடுதலாக விளங்கின. வெளிநாட்டுப்படுகடன்மீதான மொத்தப்பணக்கொடுப்பனவுகளில் ரூ. 30,250 இலட்சம் கடன்தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளையும், ரூ.21,350 இலட்சம் வட்டிக்கொடுப்பனவுகளையும் பிரதிபலித்தன. கடன்தீர்ப்பனவுக் கொடுப்பனவில் வீழ்ச்சி காணப்பட்ட போதிலும் அதிகரித்த வட்டிக்கொடுப்பனவுகள் காரணமாக உள்நாட்டுப்படுகடன் மீதான படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 1985 இன் ரூ. 115,850 இலட்சத்திலிருந்து 1986 இல் ரூ. 116,630 இலட்சத்திற்கு அதிகரித்தன.